Utdanningsdirektoratet

# Eksamen

15.11.2018

## PSP5564 Tamil nivå III

Nynorsk/Bokmål

## Nynorsk

| Eksamensinformasjon | |
|---|---|
| Eksamenstid | Eksamen varer i 5 timar. |
| Hjelpemiddel | Alle hjelpemiddel er tillatne, bortsett frå opent Internett og andre verktøy som kan brukast til kommunikasjon.<br><br>For framandspråka er heller ikkje omsetjingsprogram tillatne.<br><br>Når du bruker nettbaserte hjelpemiddel under eksamen, har du ikkje lov til å kommunisere med andre. Samskriving, chat og andre måtar å utveksle informasjon med andre er ikkje tillate. |
| Bruk av kjelder | Dersom du bruker kjelder i svaret ditt, skal dei alltid førast opp på ein slik måte at lesaren kan finne fram til dei.<br><br>Du skal føre opp forfattar og fullstendig tittel på både lærebøker og annan litteratur. Dersom du bruker utskrifter eller sitat frå Internett, skal du føre opp nøyaktig nettadresse og nedlastingsdato. |
| Informasjon om oppgåva | Du skal svare på alle dei tre oppgåvene i oppgåvesettet på tamil.<br><br>Du får utteljing for å vise kunnskap om samfunns- og kulturforhold i tamilspråklege område der det er relevant.<br><br>Det er kompetansen du viser i heile oppgåvesettet, som skal vurderast. |
| Kjelder | Sjå siste side i oppgåvesettet. |
| Informasjon om vurderinga | Sjå eksamensrettleiinga med kjenneteikn på måloppnåing til sentralt gitt skriftleg eksamen. Eksamensrettleiinga finn du på Utdanningsdirektoratets nettsider. |

# Bokmål

| Eksamensinformasjon | |
|---|---|
| Eksamenstid | Eksamen varer i 5 timer. |
| Hjelpemidler | Alle hjelpemidler er tillatt, bortsett fra åpent Internett og andre verktøy som kan brukes til kommunikasjon.<br><br>For fremmedspråkene er heller ikke oversettelsesprogrammer tillatt.<br><br>Når du bruker nettbaserte hjelpemiddel under eksamen, har du ikke lov til å kommunisere med andre. Samskriving, chat og andre måter å utveksle informasjon med andre er ikke tillatt. |
| Bruk av kilder | Hvis du bruker kilder i besvarelsen din, skal disse alltid oppgis på en slik måte at leseren kan finne fram til dem.<br><br>Du skal oppgi forfatter og fullstendig tittel på både lærebøker og annen litteratur. Hvis du bruker utskrifter eller sitater fra Internett, skal du oppgi nøyaktig nettadresse og nedlastingsdato. |
| Informasjon om oppgaven | Du skal svare på alle de tre oppgavene i oppgavesettet på tamil.<br><br>Du får uttelling for å vise kunnskap om samfunns- og kulturforhold i tamilspråklige områder der det er relevant.<br><br>Det er kompetansen du viser i hele oppgavesettet, som skal vurderes. |
| Kilder | Kilder Se siste side i oppgavesettet. |
| Informasjon om vurderingen | Se eksamensveiledningen med kjennetegn på måloppnåelse til sentralt gitt skriftlig eksamen. Eksamensveiledningen finner du på Utdanningsdirektoratets nettsider. |

## பகுதி 1

பின்வரும் உரைப்பகுதியை வாசித்து கீழ்காணும் கூற்றுக்கள் தவறானவையா அல்லது தவறு அற்றவையா என்பதை உங்கள் உரைநடையில் விளக்கி எழுதுக.

அ. திருப்பதி தமிழ்நாட்டின் வடக்கு எல்லையாகும்.

ஆ. தென் இந்தியாவில் தமிழர்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தார்கள்

இ. இவ்வுரைப் பகுதி சோழ அரசவம்சத்தைப் பற்றி மட்டும் கூறுகின்றது.

ஈ. இவ்வுரைப் பகுதியில் ஐந்து தமிழ் இலக்கிய நூல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

உ. முதலாம் இராசராச சோழன் முழு இலங்கையையும் கைப்பற்றி ஆண்டான்.

ஊ. சோழ இராட்சியம் வீழ்வதற்கு ஒரு காரணம் மக்களுக்கு போரின் மேல் ஏற்பட்ட வெறுப்பாகும்.

### சோழர் சாம்ராச்சியம்

இந்தியாவின் தென் பகுதியில் முக்கோண வடிவில் அமைந்திருக்கும் பகுதியே தென் இந்தியாவாகும். இது கிழக்கே வங்காளவிரிகுடாவையும் மேற்கே அராபியக் கடலையும் தெற்கே இந்து சமுத்திரத்தையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. வடகிழக்கு, தென்மேற்குப் பருவப் பெயற்சிக் காற்றுகளினால் இப்பகுதிகளின் காலநிலைகள் நிர்ணயிக்கப்படுகின்றன. இந்தியாவிலே மிகப் பழமைவாய்ந்த நிலப்பரப்பும், முதல்முதலாக மக்கள் வாழ்ந்த பகுதியும் தென்இந்தியாவே என்பது ஆய்வாளர்களதும் நிலநூலாளர்களதும் முடிவு. இந்தியாவிலே முதல் முதலாக மனிதன் குடியிருக்கத் தொடங்கிய பகுதி தக்கணம் என்பது யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய உண்மையே. இந்தியாவில் தமிழர் ஏறத்தாழ கி.மு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் சிறந்த முற்போக்கு நிலையை அடைந்திருந்தனர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

சாதவாகனர் மரபு தக்கணத்தை ஆண்டபோது தென் இந்தியாவின் தெற்குப் பகுதியில் சேர, சோழ, பாண்டிய மரபினர் ஆட்சி புரிந்தனர். வேங்கடம் என்னும் திருப்பதி தமிழ்நாட்டு அரசுகளுக்கு வட எல்லையாக அமைந்திருந்தது. கிழக்கே உள்ள பழவேற்காடு தொடங்கி மதுரை வரையுள்ள நிலப்பகுதியை சோழ மரபினர் ஆண்டனர். சோழர் மரபின் ஆட்சி கி.பி நாலாம் நூற்றாண்டில் இருந்து பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை தென்னிந்தியாவில் வலிமைமிக்க வல்லரசாக திகழ்ந்தது.

முதலாம் கரிகாலச்சோழனுடன் ஆரம்பித்த சோழமரபு அதன் பின் திறமைமிக்க சோழமரபில் தோன்றிய மன்னர்களால் ஆளப்பட்டது. குறிப்பாக பராந்தகர், இராசராசர், முதலாம் இராசேந்திரர், போன்றவர்களால் ஆளப்பட்டு பெருமையும் கீர்த்தியும் பெற்றிருந்தது. ஆனாலும், சமகாலத்தில் ஆண்ட பல்லவர், பாண்டியர், சேரர், போன்ற அரசமரபுகளில் தோன்றிய மன்னர்களின் படைகளினால் பல தடவைகள் பெரும் தடைகளை சோழ மன்னர்கள் எதிர் நோக்க வேண்டிய நிலையில் இருந்தனர்.

கரிகாலனின் வீரச் செயல்கள் பற்றி புறநானூறு, பெருநாற்றுப்படை, பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற தமிழ் இலக்கிய நூல்களில் சிறப்பாக கூறப்பட்டுள்ளன. இப் பேரரசன் ஆண்ட காலத்தை வரையறுத்து கூறுவதில் சரித்திர ஆய்வாளர்களிடம் பல வேறுபட்ட கருத்துகள் உண்டு. ஆனாலும் இவ்வரது பேரரசு கி.பி நாலாம் நூற்றாண்டுக்கு முன் இருந்தது என்பதை திடமாக கூறமுடியும்.

கி.பி தொள்ளாயிரத்து ஏழாம் ஆண்டு பராந்தகச் சோழன் ஆட்சி ஏற்கும் போது சோழஆட்சி களாத்தி முதல் தெற்கே புதுக்கோட்டை வரை பரவியிருந்தது. பராந்தகச் சோழன் தனது ஆட்சியில் மதுரையையும், இலங்கையையும் வென்று தனது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தார். பராந்தகச் சோழன் இறந்த பின் வலிமை குன்றியிருந்த சோழ அரசு முதலாம் இராசராச சோழர் காலத்தில் மீண்டும் வலிமை பெற்றது. இவர் சேரரையும் வட இலங்கையையும் தம் நாட்டுடன் இணைத்துக் கொண்டார்.

இவர் மகன் முதலாம் இராசேந்திரர் சேர, பாண்டிய நாடுகளை வென்றது மாத்திரமன்றி முழு இலங்கையும் தனது ஆட்சியின் கீழக் கொண்டுவந்தார். இவர் வடஇந்தியாவின் கங்கைக்கரை வரை படையெடுத்துச் சென்று சோழர் ஆட்சியை விரிவுபடுத்தி «கங்கை கொண்டான்» என்ற பட்டத்தையும் பெற்றார். இதனால் தெற்கில் அவரது தலைநகரத்துக்கு «கங்கை கொண்ட சோழபுரம்» என்ற பெயரும் ஏற்பட்டது. இவர் திறமைமிக்க கடற்படையை உருவாக்கி தென்கிழக்காசிய நாடுகளில் சிலவற்றை வெற்றி கொண்டார். இவரின் நிபத்தனைகளை ஏற்ற அந் நாட்டு அரசர்களிடம் நாடுகளைத் திரும்ப ஒப்படைத்தார்.

இவரின் பின் வந்த சோழமன்னர்கள் தம் முன்னோர் விட்டுச் சென்ற சோழ இராச்சியத்தின் பெருமையையும் கீர்த்தியையும் பாதுகாக்க பல போர்களில் ஈடுபட்டிருந்தார்கள்.
ஆயினும் காலப்போக்கில் சோழ அரசின் உறுதி தளரவே புரட்சிகளும் கிளர்ச்சிகளும் உருவாகின. பசி, பட்டினி என்பன சோழரின் அழிவுக்குப் பின்னணிக் காரணங்களாக அமைந்தன. மூன்றாம் இராசேந்திரனின் ஆட்சியின் முடிவில் வரகுணபாண்டியன் சோழ அரசை வென்று வீழ்த்தினான்

## பகுதி 2

நோர்வேயில் வாழும் தமிழர்களிடம் நடத்தல், மிதிவண்டி பாவித்தல், வாகனம் பாவித்தல், அரச போக்குவரத்து ஊர்திகளைப் பாவித்தல் பற்றிய கருத்தை அறிய ஒரு ஆய்வு செய்ய நீங்கள் விரும்புகின்றீர்கள். இந்த ஆய்வுக்கான ஆய்வுப் படிவம் ஒன்றைத் தமிழில் தயாரிக்கவும். நீங்கள் தயாரிக்கும் படிவத்தில் இருந்து பின்வரும் விடயங்கள் பற்றிய தகவல்களைப் பெற விரும்புகின்றீர்கள் - வேலை, ஓய்வு நேரம், எப்போது, எத்தனை தடவைகள் போன்றன.

ஆய்வுப் படிவம் - skjema brukt i en undersøkelse

## பகுதி 3

பின்வருவனவற்றில் ஒன்றைத் தெரிவு செய்து 20 வாக்கியங்களுக்கு குறையாமல் தமிழில் எழுதுக.

அ. தமிழ் நன்றாகப் புரிந்து கொள்ளக்கூடிய உங்களின் நண்பர் ஒருவர் தமிழர் வாழும் பிரதேசங்களுக்கு ஒரு போதும் சென்றதில்லை. அவருக்கு எவ் இடத்திற்கு செல்லலாம், அங்கு எவ்வாறு செல்லலாம் என்பதை விளக்கி, அந்த இடத்தை ஏன் தெரிவு செய்தீர்கள் என்ற காரணத்தையும் விரிவாக எழுதுக.

ஆ. கடலில் அதிக அளவு பிளாஸ்ரிக் சேர்ந்துள்ளது. கிட்டத்தட்ட 269.000 தொன் பிளாஸ்ரிக் உலக கடலில் இருந்து அகற்றி உள்ளார்கள். ஆனாலும் இன்னும் அதிக அளவு கடலுக்கு அடியில் காணப்படுகின்றது. இது கடலிலுள்ள உயிரினங்கள் மீன் பறவைகள் போன்றவற்றை அதிக அளவு பாதிக்கின்றது. இது பற்றி நீங்கள் என்ன கருதுகின்றீர்கள்? இதனை அகற்றி சூழல் மாசுபடுவதைக் குறைக்க எவ்வாறான நடவடிக்கைகளை மாணவராகிய நீங்கள் எடுக்கலாம்?

plast- பிளாஸ்ரிக், நெகிழி

# Kjelder/Kilder:

Oppgåve/Oppgave 1
Sørindisk historie, Dr.K.K Pillai (Part I 8.edition 2013)

Histroy of the Tamils, P.T.Srinivas Iyengar, Asian educational services, New Delhi(1983)

The early history of Ceylon, G.C.Mendis(Asian educational services, New Delhi(1985)

Oppgåve/Oppgave 3
https://forskning.no/miljo-naturvitenskap/2014/12/enorme-plastmengder-i-havet

Schweigaards gate 15
Postboks 9359 Grønland
0135 OSLO
Telefon 23 30 12 00
utdanningsdirektoratet.no

Utdanningsdirektoratet